தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மாசி 25, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

2005 மார்ச் 9, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. அ. அருணாசலம்** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்."

குடிமக்களைப் பாதுகாத்துத் துணை நிற்பதும், குற்றம் செய்தவர்கள் யாராயினும் தனக்கு இழுக்கு வரும் என்று கருதாமல் தண்டிப்பதும் அரசின் கடமையாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் வினா எண் 121, திரு. சு. சிவராஜ், மாண்புமிகு நிதி அமைச்சர்.

121—

கட்டட வசதி

***36525—திரு. சு. சிவராஜ்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்ட கருவூலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பெருந்திட்ட வளாகத்தில் புதிய கட்டடம் கட்ட அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2005 மார்ச் 9

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டத்தில் பெருந்திட்ட வளாகம் கட்ட Master Plan Complex வருவாய்த் துறையினால் 12-9-1995-ல் அரசாணையிடப்பட்டது. விழுப்புரம் மாவட்ட கருவூல அலுவலகம் கட்ட 0.25 எக்டேர் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் இதற்கான திட்ட மதிப்பீடு 53 இலட்சத்திற்கு சென்னை தலைமைக் கட்டட வல்லுநர் மூலமாகத் தயாரிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண்டும் 10 விழுக்காடு உயர்வுத் தொகையாக எடுத்துக்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டது. தற்போது விழுப்புரம் மாவட்ட கருவூலத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு 70.54 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சு. சிவராஜ் இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம் புதிய மாவட்டமாக உருவாக்கப்பட்டுள்ளதால் அதன் பணிகள் அதிகரித்துள்ளன. எனவே, பொதுமக்களின் நலன் கருதி கருவூலத்திற்குப் புதிய கட்டடத்தை விரைந்து கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழக்கம்போல அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 122, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

122—

சிறு தொழிற்சாலைகள்

*** 24061—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டத்தில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், சோப்பு தயாரித்தல், ஊதுவத்தி தயாரித்தல் போன்ற சிறு சிறு தொழிற்சாலைகளை அரசு துவங்குமா?